## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 09.05.2013–ஆம் நாளிட்ட அறிக்கையில் 1000 ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், ரூ.2.54 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோருக்கான 5 விடுதிகள், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 3 விடுதிகள், சீர்மரபினருக்கான ஒரு விடுதி மற்றும் சிறுபான்மையினருக்கான ஒரு விடுதி என மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந1)துறை**

அரசாணை (நிலை) எண். 99 நாள்: 25.10.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044
விஜய, ஐப்பசி 8

படிக்கப்பட்டது :

1. அரசு கடித எண். 3178/பிந1/2013–5, நாள். 26.08.2013.
2. முதன்மைச் செயலர் / பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் கடித எண். பி4/2504/2013, நாள். 29.08.2013.

* * * * * *

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை விதி எண் 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 09.05.2013 அன்று கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> "1000 ஏழை எளிய மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோருக்கான 5 விடுதிகள், மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கான 3 விடுதிகள், சீர்மரபினருக்கான ஒரு விடுதி மற்றும் சிறுபான்மையினருக்கான ஒரு விடுதி என மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்படும்".

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலர் / பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களின் நலனுக்காக மொத்தம் 1294 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நல முதன்மைச் செயலர் / ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 710 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின்

கட்டுப்பாட்டின் கீழ் 572 விடுதிகளும், சிறுபான்மையினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 12 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. புதிதாக துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 இடங்களில் கல்லூரி / பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளை புதியதாக துவக்கி செவ்வனே செயல்பட 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட ஒவ்வொரு விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது எனவும், எனவே, கீழ்க்கண்ட விவரப்படியான பணியிடங்களை ஏற்படுத்திடவும், அப்பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக அறிவிக்குமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியுள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

4. கடந்த ஆண்டில் புதிய விடுதிகள் துவங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டபொழுது தொடரா செலவினத்தின் கீழ் பொருள்கள் வாங்குவதற்கு கூடுதல் தொகைக்கு ஒப்பளிப்பு கோரப்பட்டது என்றும், ஆனால் கடந்த ஆண்டில் அரசாணை பிறப்பிக்கப்படும்பொழுது அப்பொருள்கள் வாங்குவதற்கு கடந்த 2005–06, 2006–07, 2007–08–ஆம் ஆண்டுகளில் 50 மாணவர்கள் தங்குவதற்கு என ஒப்பளிக்கப்பட்ட தொகையே 100 மாணவர்கள் தங்கும் விடுதிக்கும் ஒப்பளிக்கப்பட்டதால், இத்தொகையைக் கொண்டு பொருள்கள் வாங்குவது மிக சிரமமாக உள்ளது என்றும், தவிர 2013–14–ஆம் ஆண்டில் 1000 மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில் 10 புதிய விடுதிகள் துவக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டதன்படி, ஒவ்வொரு விடுதிக்கும் 100 மாணவ, மாணவிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், எனவே, நடப்பாண்டிற்கு தொடரா செலவினத்தின் கீழ் ஆணையரத்தால் முன்மொழியப்பட்டுள்ள விபரப்படி தொகைகள் ஒப்பளிப்பு செய்யும்படியும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியிருந்தார்.

5. மேலும், நடப்பாண்டில் (2013–14) ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் செலவில் மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்படும் என சட்டமன்றத்தில் புதிய அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் தற்பொழுது விடுதி மாணவ, மாணவியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுக் கட்டணம் மற்றும் சிறப்பு உணவுக் கட்டணம் மற்றும் காப்பாளர்/ காப்பாளினி ஊதிய விகிதம் ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன என்றும், மேற்குறிப்பிட்ட காரணங்களினாலும், 2013–14–ஆம் ஆண்டின் பகுதி–II மற்றும் புதிய அறிவிப்பின் கீழ் அனைத்து விடுதிகளுக்கும் வழங்கப்படுவதைப்போல் புதியதாக திறக்கப்பட உள்ள விடுதிகளுக்கும் சிறப்பு உணவு கட்டணம், வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள், மாணவியர் விடுதிகளுக்கு சுகாதார குட்டை தகளி வழங்கவும், தற்பொழுது கூடுதல் நிதி தேவைப்படுகிறது எனவும், எனவே தற்போதைய நிலையில் 10 புதிய விடுதிகளைத் துவக்க

ரூ.275.28 இலட்சம் நிதி தேவைப்படுமெனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. எனவே, முதன்மைச் செயலர் / பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, 9 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் 1 சிறுபான்மையினர் பள்ளி மாணவியர் விடுதி ஆகமொத்தம் 10 புதிய விடுதிகளை இணைப்பில் வைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களில் துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் தொடரா செலவினம் ரூ.25,65,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்து அறுபந்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் தொடரும் செலவினம் ரூ.2,27,99,960/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தெழு இலட்சத்து தொண்ணுற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) ஆக மொத்தம் ரூ.2,53,64,960/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) முழுமையாக்கி கீழே வைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி ரூ.2.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், நடப்பாண்டில் (2013–14) 6 மாதங்களுக்கு ஏற்படும் செலவினமான ரூ.1,49,98,180/–ஐ முழுமையாக்கி ரூ.1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலும், இத்துறையில் புதிதாக துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 விடுதிகளுக்கு கீழ்கண்டவாறு 40 (காப்பாளர் + சமையலர் + காவலர்/ஏவலர்) பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், 10 பணியிடங்கள் (துப்புரவு பணியாளர்) தொகுப்பூதிய அடிப்படையிலும் தோற்றுவித்தும் அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | 10 விடுதிகளுக்கு தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 10 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 20 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 10 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/– தொகுப்பூதிய அடிப்படையில் | 10 |
| | மொத்தம் | | 50 |

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் (5 விடுதிகள்) (ரூ.75,48,730/–): (6 மாதங்களுக்குரியது)

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – JA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-JA-0106) | 30,11,880 | -- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-JA-0553) | --- | 1,50,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (5Xரூ.10,000X6 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-JA-0615) | 3,00,000 | -- |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-JA-1918) | -- | 75,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-JA-2408) | -- | 8,53,750 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-JA-3425) | --- | 2,00,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-JA-6799) | 27,25,000 | -- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-JA-9901) | 2,33,100 | -- |
| | 62,69,980 | 12,78,750 |
| மொத்தம் | ரூ. 75,48,730/– | |

**(ii) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் (3 விடுதிகள்) (ரூ.45,53,370/–):**

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள்<br>(DPC 2225-03-277-KA-0105) | 18,01,260 | --- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | --- | 90,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (3Xரூ.10,000X6 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-KA-0614) | 1,80,000 | --- |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-1917) | --- | 75,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | --- | 5,12,250 |
| 34 ஏனைய செலவுகள்,<br>02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | --- | 1,20,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 16,35,000 | --- |
| 99 பல்வகை<br>(DPC 2225-03-277-KA-9900) | 1,39,860 | --- |
| | 37,56,120 | 7,97,250 |
| **மொத்தம்** | **ரூ. 45,53,370/–** | |

**(iii) சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி (1 விடுதி) ரூ.14,92,790/–):**

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது–101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JH – சீர்மரபினர் மாணவரில்லங்கள்.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் (DPC 2225–80 –101– JH – 0100) | 6,00,420 | --- |
| 05 அலுவலக செலவினங்கள் 05 அறை கலன்கள் (DPC 2225–80 –101– JH – 0557) | --- | 30,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள் 01 வாடகை (6000X10,000X6) (DPC 2225-03-277-JH-0619) | 60,000 | --- |
| 24 பொருட்களும், வழங்கலும் (DPC 2225–80 –101– JH – 2402) | --- | 1,70,750 |
| 34 ஏனைய செலவுகள், 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் (DPC 2225–80 –101– JH – 3429) | --- | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள் 09 ஏனையவை (DPC 2225–80 –101– JH – 6793) | 5,45,000 | --- |
| 99 பல்வகை (DPC 2225–80 –101– JH – 9905) | 46,620 | --- |
| | 12,52,040 | 2,40,750 |
| **மொத்தம்** | **ரூ. 14,92,790/–** | |

(iv) <u>சிறுபான்மையினர் பள்ளி விடுதி (1 விடுதி) (ரூ.14,03,290/–)</u> :

“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்”.

| செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் (DPC 2225-03-277-LA-0104) | 6,00,420 | --- |
| 05 அலுவலக செலவினங்கள் 05 அறை கலன்கள் (DPC 2225-03-277-LA-0551) | --- | 30,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள் 01 வாடகை (6000X10,000X6) (DPC 2225-03-277-LA-0613) | 60,000 | --- |

| | | |
|---|---|---|
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் (DPC 2225-03-277-LA-1916) | --- | 25,000 |
| 24 பொருட்களும் வழங்கலும் (DPC 2225-03-277-LA-2406) | --- | 1,45,750 |
| 34 ஏனைய செலவுகள், 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல் (DPC 2225-03-277-LA-3423) | --- | 30,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள் 09 ஏனையவை (DPC 2225-03-277-LA-6797) | 4,63,000 | --- |
| 68 புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு (DPC 2225-03-277-LA-6804) | --- | 17,500 |
| 99 பல்வகை (DPC 2225-03-277-LA-9909) | 31,620 | --- |
| | 11,55,040 | 2,48,250 |
| **மொத்தம்** | **ரூ. 14,03,290/–** | |

9. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I) துறையில் தனியே வெளியிடப்படும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவு செய்யத் தேவையான முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013–2014–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானியக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதித் (வரவு–செலவு பொது–I) / (பி.மி.பி. (ம) சி.ந.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இணைப்பில் கண்டுள்ள 10 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா. எண். 61611/CMPC./2013, நாள். 24.10.2013 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1756 (ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்தாறு) –ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர், சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–1), சென்னை– 18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை–2), சென்னை– 18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5 / மதுரை
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்

நகல்:
நிதித் (பி. மி.பி./வ.செ.பொது I/வ.செ. பொது II) துறை, சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையிர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த் துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

10 புதிய பள்ளி / கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான இறுதிப் பட்டியலின் விவரம்

| வ.எண். | மாவட்டம் | விடுதிகளின் விவரம் |
|---|---|---|
| **பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | | |
| 1. | தஞ்சாவூர் | கல்லூரி மாணவியர் விடுதி, ஒரத்தநாடு. |
| 2. | ஈரோடு | கல்லூரி மாணவியர் விடுதி, கோபிச்செட்டிபாளையம். |
| 3. | தேனி | கல்லூரி மாணவர் விடுதி, தேனி நகரம். |
| 4. | இராமநாதபுரம் | கல்லூரி மாணவியர் விடுதி, பரமக்குடி. |
| 5. | கோயம்புத்தூர் | கல்லூரி மாணவர் விடுதி, பீளமேடு. |
| **மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்** | | |
| 1. | சேலம் | கல்லூரி மாணவியர் விடுதி, வடசென்னிமலை, கெங்கவல்லி வட்டம். |
| 2. | தருமபுரி | கல்லூரி மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி. |
| 3. | திருவாரூர் | கல்லூரி மாணவியர் விடுதி, நன்னிலம். |
| **சீர்மரபினர் நல விடுதி** | | |
| 1. | மதுரை | கல்லூரி மாணவர் விடுதி, உசிலம்பட்டி. |
| **சிறுபான்மையினர் நல விடுதி** | | |
| 1. | தேனி | பள்ளி மாணவியர் விடுதி, தேனி நகரம். |

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

[signature] 23/10/13
பிரிவு அலுவலர்.

## இணைப்பு– II

தொடரா செலவினத்தில் ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வருமாறு:

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. |
|---|---|---|
| (i) | எரிவாயு இணைப்பு | 30,000 |
| (ii) | நூலக வசதி | 30,000 |
| (iii) | பாத்திரங்கள் | 30,000 |
| (iv) | மரச்சாமான்கள் | 30,000 |
| (v) | அரவை இயந்திரம் | 12,500 |
| (vi) | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 |
| (vii) | விளையாட்டு கருவிகள் | 5,000 |
| (viii) | முதலுதவி பெட்டி | 650 |
| (ix) | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 6,000 |
| (x) | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 |
| (xi) | பாய் (100 எண்ணிக்கை x ரூ.60) | 6,000 |
| (xii) | பெட்ஷீட் (100 எண்ணிக்கை x ரூ.180) | 18,000 |
| (xiii) | தட்டு மற்றும் டம்ளர் (100 எண்ணிக்கை x ரூ.75) | 7,500 |
| (xiv) | அகராதி மற்றும் அட்லஸ் (100 எண்ணிக்கை x ரூ.175) (பள்ளி விடுதிகளுக்கு மட்டும்) | 17,500 |
| (xv) | மின் அரைப்பான் | 6,000 |
| (xvi) | இட்லி வேகவைப்பான் | 8,000 |
| (xvii) | சுகாதார குட்டைதகளி (மாணவியர் விடுதிகளுக்கு மட்டும்) | 25,000 |

மேலும் கல்லூரி விடுதி மற்றும் பள்ளி விடுதிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இனங்கள் தவிர ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டவாறு கூடுதல் இனங்களுக்கும் செலவினம் அனுமதிக்கப்படுகின்றது.

(i) இன்வர்ட்டர் ரூ.15,000/–

(ii) பாடக்குறிப்புப் புத்தகம் ரூ.10,000/–

(iii) புத்தக அலமாரி ரூ.10,000/–

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.